# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S. 155/2019

# CNR.No.TNCB19000

Date: 15/10/2024 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கலையரசு | **வயது** | 50 |
| **த/பெ** | ரங்கசாமி | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| **விலாசம்** | திம்மம்பாளையம் | **மாவட்டம்** | கோவை |
| | | **தொழில்** | |

The witness sweared under oaths Act 1969 on this the day of 15th October 2024.

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

உயிலை தயாரித்தவர் மற்றும் தட்டச்சு செய்தவர் யார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது எனது அம்மாவிற்கு தான் தெரியும். என்னிடம் உயிலை கொடுத்தது யார் என்றால் எனது அப்பா. எந்த தேதியில் எப்போது கொடுத்தார் என்றால் ஞாபகம் இல்லை. அம்மா இறந்து எவ்வளவு நாட்கள் கழித்து உயிலை எனது அப்பா கொடுத்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது அம்மா இறப்பதற்கு 17 நாட்களுக்கு முன்பு உயில் எழுதப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எந்த இடத்தில் வைத்து உயிலை கொடுத்தார் என்றால் வீட்டில் வைத்து கொடுத்தார் என்று சொல்லிவிட்டு தோட்டத்தில் வைத்து கொடுத்ததாக சொல்கிறார். சாட்சி மீண்டும் அப்பா அம்மா வாழ்ந்த வீட்டில் வைத்து கொடுத்தாக சொல்கிறார். அசல் உயிலை முதன் முதலில் எப்போது பார்த்தேன் என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் எனது அப்பா கொடுக்கும் போது பார்த்தேன். வழக்கு தாக்கல்

செய்யும்போது அசல் உயிலையும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். உயிலை எனது அப்பாவிற்கு யார் கொடுத்தார்கள் என்றால் சாட்சி ராமமூர்த்தி கொடுத்தார். சாட்சி ராமமூர்த்தியை உயில் கிடைத்து எத்தனை நாட்கள் கழித்து பார்த்தேன் என்றால் அவரை தினந்தோறும் பார்ப்பேன். உயில் எழுதியதாக சொல்லப்படும் காலகட்டத்தில் எனது அம்மா தாவா 1 வது அயிட்டத்தில் குடியிருந்து வந்தார் என்றால் அம்மாவும் அப்பாவும் இருவரும் அங்குதான் குடியிருந்து வந்தார்கள்.

தற்போது நான் குடியிருந்துவரும் இடத்தில் தான் அம்மாவும் அப்பாவும் குடியிருந்து வந்தோம் என்றால் சரியல்ல. தற்போது நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு எப்போது சென்றோம் என்றால் சுமார் 20 வருடத்திற்கு முன்னர் சென்றோம்.

( பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி
என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/- K. Palanivel.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.